

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 16ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் திங்கள்கிழமை**

**அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம் - குறள் எண் : 56**

### குறள்

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

### குறள் விளக்கம்

கற்புநெறியில் தன்னையும் தன் கணவனையும் காத்துக் கொண்டு, தமக்குப் பெருமை சேர்க்கும் புகழையும் காப்பாற்றிக் கொள்வதில் உறுதி குலையாமல் இருப்பவள் பெண்.

### பழமொழி ( Proverb )

***A sound mind in a sound body***

**உடல் வலுவுற்றால் உள்ளமும் வலுவுறும்.**

### பொன்மொழி

நம் தன்னம்பிக்கை, திட்டம் மற்றும் நடவடிக்கை தீவிரமாயிருக்கும் போது நாம் எவ்வளவு சிறியவர் என்பது ஒரு விஷயமே அல்ல.

### இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

### இன்றைய பொது அறிவு வினா விடை

1. ஆகாய விமானம் எந்த ஆண்டில் கண்டிபிடிக்கப்பட்டது? 1903 ஆம் ஆண்டில்
2. நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடித்தவர்? புஷ்நெல்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

Who’s next? அடுத்தது யார் ?

Do you follow me? நீங்கள் என்னை பின்தொடர்கிறீர்களா



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**வரலாற்றில் இன்று :**

- முன்னாள் இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாய் பிறந்த தினம்(1896)
- பின்லாந்து, குளிர்காலப் போரை முடிவுக்கு கொண்டு வர அமைதி முயற்சிகளில் இறங்கியது(1940)
- செயின்ட் பீட்டஸ்பர்க், புளோரிடா ஆகியன இணைக்கப்பட்டன(1892)
- ஹிலிகோலாந்து தீவு மீண்டும் ஜெர்மனின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது(1952)
- இந்திய தேசிய அறிவியல் தினம்
- இந்தியாவின் முதல் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் இறந்த தினம்(1963)
- முதல் வளைகுடா போர் முடிவு பெற்றது(1991)
- வொலஸ் கரோதேர்ஸ் என்பவரால் நைலான் கண்டுபிடிக்கப்பட்டது(1935)
- எகிப்தின் விடுதலையை யூ.கே., அங்கீகரித்தது(1922)

## இன்றைய செய்திகள்

- உக்ரைன் மீது படையெடுப்பில் ரஷ்யா படைகள் முன்னேறி வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.
- உக்ரைன் தெற்கு பகுதியில் உள்ள 2 நகரங்களை கைப்பற்றியுள்ளது.
- உக்ரைனிலிருந்து 100 மாணவர்கள் இன்று விமானம் மூலம் இந்தியா அழைத்து வரப்படுகின்றனர்
- உக்ரைன் நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்த தயார் என ரஷ்யா அறிவித்துள்ளது.
- 12 தமிழக மாணவர்கள் உட்பட 240 மாணவர்களுடன் உக்ரைனில் இருந்து இந்தியா நேற்று அழைத்து வந்துள்ளது. இதுவரை 709 மாணவர்கள் அந்நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர்.
- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய “உங்களில் ஒருவன்“ புத்தகத்தை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு.ராகுல்காந்தி இன்று வெளியிடுகிறார்.
- மகா சிவாராத்திரியை முன்னிட்டு நான்கு நாட்களுக்கு சதுரகிரி மலைக்கு செல்ல அரசு அனுமதி.
- எல்லை கடந்து மீன் பிடித்ததாக 10 தமிழக மீனவர்களை இலங்கை கைது செய்துள்ளது.
- நேற்று நடைபெற்ற இந்தியா—இலங்கை 3வது 20 –20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி